# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,
அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 1 (LW-1 ) | நாள் | 20.08.2025 |
| பெயர் | அஜய் | வயது | |
| தந்தை பெயர் | கல்யாணகுமார் | கிராமம் | |
| தாலுக்கா | | | |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் முட்டம் வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் வெல்டிங் மற்றும் கேட்டரிங் வேலை செய்துவருகிறேன். இறந்து போனது ஹரிஷ் மற்றும் ஹரிசக்தி. அவர்கள் குற்றம் சாட்டப்பட்ட 1, 2, 3 நபர்களால் கொலை செய்யப்பட்டனர். 1ம் நபர் தங்கதுரை, 2ம் நபர் மூவேந்தன், 3ம் நபர் ராஜ்குமார், 4ம்நபர் முனுசாமி, 5ம் நபர் மஞ்சுளா, 6ம்நபர் சஞ்சய் ஆகியோரை சாட்சி ஒவ்வொருவராக அடையாளம் காட்டி அவர்கள் தான் இறந்துபோன ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை கொலை செய்ததாக கூறுகிறார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ராஜ்குமார் தங்கதுரை அக்கா காயத்ரி என்பவரை அழைத்து சென்று விட்டார். அதற்கு நாங்கள் எல்லாம் எதிர்ப்பு தெரிவித்தோம். அதனால் எங்கள் குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்தது. கடந்த 13.02.2025 அன்று மாலை 6.00 மணியளவில் தினேஷ் வேலைக்கு சென்று விட்டு முட்டம் ஆற்றங்கரையிலிருந்து வந்துகொண்டிருந்தார்அப்போது மூவேந்தன் என்னை பார்த்து ஏன் ஊளையிடுகிறாய் என்று சொல்லி கன்னத்தில் அறைந்தார். பிறகு தினேஷ் வீட்டிற்கு வந்துவிட்டார். பின்பு மறுநாள்

K.அஜய்

14.02.2025 அன்று எங்கள் தெரு முக்கூட்டில் இரவு 8.30 மணியளவில் நானும், ஹரிஷ், ஹரிசக்தி, தினேஷ் ஆகியோர் செல்போனில் பார்த்துகொண்டிருந்தோம் அப்போது மஞ்சுளா அங்கு வந்து எங்களை பார்த்து என்னடா எங்கள் மகன்களை பார்த்து ஊளையிடுகிறீர்கள் எளக்காராம இருக்கா என்று திட்டிவிட்டு போனார். அப்போது தங்கதுரை, மூவேந்தன், ராஜ்குமார் ஆகியோர் கத்தியுடன் அங்கு வந்து தினேஷை பார்த்து ஏன்டா எங்களுக்கு குடைச்சல் கொடுத்து கொண்டிருக்கிறாய் என்று சொல்லி கத்தியால் குத்தபோனார். அப்போது ஹரிசக்தி ஏன் அண்ணா சண்டை போடுகிறீர்கள் என்று தடுத்தார். அப்போது தங்கதுரை ஹரிசக்தியை பார்த்து நீ என்ன அவனுக்கு சப்போர்ட்டா என்று சொல்லி அவரை கத்தியால் குத்த முயன்றார். அப்போது ஹரிசக்தி திரும்பியதால் கத்தி இடது பக்க தொடையில் குத்திவிட்டார். அப்போது ஹரிசக்தி கீழே விழுந்துவிட்டார். பிறகு தங்கதுரை கத்தியை எடுத்து கத்தியின் பிடியால் ஹரிசக்தியின் நெஞ்சில் குத்தினார். அதை ஹரிஷ் தடுக்க சென்றார். அப்போது மூவேந்தன் ஹரிஷை பார்த்து நீ என்ன அவனுக்கு சப்போர்ட்டா என்று சொல்லி செத்து ஒழிடா என்று சொல்லி ஹரிஷை இடது வயிறில் குத்தி விட்டார். அதை பார்த்து விட்டு நான் தடுக்க சென்றேன். அப்போது ராஜ்குமார் கத்தியை எடுத்து என்னை குத்த வந்தார் நான் தடுத்தேன் அதன் விளைவாக என் இடது கட்டைவிரலில் காயம் ஏற்பட்டது. பின்பு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை பைக்கில் அழைத்து சென்றோம். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர் இருவரும் இறந்து விட்டதாக சொன்னார்கள். பின்பு மறுநாள் 15.02.2025 அன்று காவல் ஆய்வாளர் நாகவள்ளி என்னை மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தபோது என்னை விசாரித்தார். நான் கொடுத்த **புகார் வாக்குமூலம் அசாஆ 1** ஆகும். பின்பு

K. அஜய்.

மாணவிகளை கிண்டல் செய்தது தொடர்பாக வக்கீல் கரிகால சோழன் அறிவுரை கூறிய விவரம் எனக்கு தெரியாது. பொதுவாக வக்கீல் கரிகால சோழன் எங்களுக்கு நல்ல வார்த்தை நல்லபடி இருக்க வேண்டும் என்று அறிவுரையாக சொல்வார். சம்பவத்தன்று நாங்கள் உட்கார்ந்திருந்த முக்கூட்டு இருட்டான இடம் என்றால் சாட்சி அங்கு ஒரு போஸ்ட் மரம் உள்ளது ஒரு சிறிய சர்ச் உள்ளது அங்கு விளக்கு வெளிச்சம் இருந்தது. அந்த விவரத்தை போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. சம்பவத்தன்று சம்பவத்தின்போது நானும், என் அண்ணன் ஹரிஷ், ஹரிசக்தி, தினேஷ் ஆகிய நால்வர் தான் இருந்தோம். வேறு யாரும் அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான். ஒரு பத்து மீட்டர் தள்ளி சின்னக்குட்டி மாமா, சுபசோழன், ஆதி, மாணிக்கம் நான்கு பேரும் அங்கிருந்தார்கள். அந்த விவரத்தை நான் புகாரிலோ போலிசார் விசாரித்தபோதோ சொல்லவில்லை என்றாலும் தற்போது சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மயிலாடுதுறை மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். 15.02.2025 அன்று தான் போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள். என்னை இரண்டு முறை போலிசார் விசாரித்தார்கள். காதலித்து திருமணம் செய்த பிறகு இருகுடும்பத்தினரும் பிரிந்திருந்து பின்னால் ஒன்றாக சேர்ந்து விட்டதால் எனக்கும் எங்கள் ஊர்காரர்களுக்கும் பிடிக்கவில்லை என்றால் சரிதான். நான் கையில் காயம் ஏற்பட்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில சொன்ன விதத்தில் எதிரிகள் யாரும் ஹரிஷையோ, ஹரிசக்தி என்ற சக்தி, தினேஷையோ எந்த ஒரு ஆயுதங்களை கொண்டு தாக்கவில்லை என்றால் சரியல்ல. ராஜ்குமார் என்னை தாக்க வரும்போது

K. அஜய்

மறுநாள் செம்பனார் கோவில் காவல் ஆய்வாளர் என்னை மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார். அப்போது நான் முதல் நாள் பதட்டத்தின் காரணமாக மூன்று நபர்களை முன் விசாரணையில் சொல்ல மறந்ததன் காரணமாக செம்பனார் கோவில் காவல் ஆய்வாளரிடம் சொன்னேன். முனுசாமி, மஞ்சுளா, சஞ்சய் ஆகியோரை சொன்னேன். மஞ்சுளா சம்பவ சண்டையின்போது குத்தி குடலை உருவுடா என்று சொன்னதையும், முனுசாமி கட்டையை வைத்து கொண்டு அப்போது நின்றதையும் சஞ்சய் எதிரிகளை ஏற்றி செல்வதற்கா தயார் நிலையில் இருசக்கரவாகனத்தை வைத்திருந்ததையும் சொன்னேன். சாட்சியிடம் கத்திகளை காட்டி கேட்டபோது இருட்டில் சரியாக தெரியவில்லை என்றும் வளைவுவளைவாக இருந்தது என்றும் சொன்னார் பிறகு தொட்டு பார்த்து விட்டு கருப்பு கைப்பிடி உள்ள பெரிய கத்தியை தங்கதுரை வைத்திருந்தார் என்கிறார். அது **சாபொ-1** ஆகும். மற்ற கத்திகளை பார்த்து விட்டு நினைவில்லை என்கிறார்.

**1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3ம் எதிரி 1, 2 எதிரிகளின் தங்கையும் 4, 5 எதிரிகளின் மகளான காயத்ரி என்பவரை காதலித்து திருமணம் செய்தார் என்பதற்காக அவர்கள் குடும்பத்தாரிடம் யாரும் ஊரில் பேசக்கூடாது என்று தீர்மானம் போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். எங்கள் ஊரில் நடுரோட்டில் பட்டாக்கத்தி வைத்து நான், தினேஷ், நண்பர்கள் கேக் வெட்டி ஆபாசமாக பேசி கூச்சலிட்டது தொடர்பாக எங்கள் ஊரை சேர்ந்த வழக்கறிஞர் கரிகாலன் எங்களுக்கு அறிவுரை வழங்கினார் என்றால் சாட்சி ஆம் அறிவுரை வழங்கினார் என்கிறார். பட்டாக்கத்தி எதுவும் வைத்து கொள்ளவில்லை. நடுரோட்டில் இல்லை எங்கள் வீட்டு வாசலில் கொண்டாடினோம் என்கிறார். தினேஷ் பள்ளிக்கு செல்லும்

K. அஜய்

நான் இடது கையால் தடுத்தபோது இடது கை கட்டைவிரலில் காயம் ஏற்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த காயமும் இடது கை கட்டைவிரலில் ஏற்படவில்லை என்றாலும் அதற்காக நான் எந்த சிகிச்சையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஹரிசக்தி என்ற சக்தி வக்கீல் கரிகாலசோழனுக்கு உறவினர் என்றால் சரிதான். அவர் மாணிக்கம், மணிகண்டன் ஆகியோருக்கும் உறவினர் என்றால் சரிதான். நாங்கள் நடுரோட்டில் பட்டாகத்தி வைத்து கேக் வெட்டுவது ஆபாசமான வார்த்தைகளை திட்டுவது, பள்ளிக்கு செல்லும் மாணவிகளை கிண்டல் கேளி செய்வது போன்ற செயல்கள் செய்து எங்களுக்குள் உள்ள பிரச்சனையால் ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டதில் தான் இருவரும் இறந்து போனர்கள் என்றால் சரியல்ல. ஹரி என்ற ஹரிசக்தி சம்பவத்தின் போது இருதய அறுவை சிகிச்சை செய்தவர் என்றால் சாட்சி அவர் சிறு வயதில் இருந்தபோது அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்கிறார். எங்கள் நண்பர்களுக்குள்ள பிரச்சனை நாங்கள் ஒருவரையொருவர் தாக்கி கொண்டதில் ஹரிசக்தி தடுமாறி தலைக்குப்புற கீழேவிழுந்து ஏற்கனவே இதய அறுவை சிகிச்சை செய்த இடத்தில் தரையில் விழுந்து பலமாக அடிபட்டு அதனால் தான் அவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. அவருக்கு கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எந்தவொரு விளக்கு வெளிச்சமும் கிடையாது என்றாலும் இருள் சூழ்ந்த இடம் என்றால் சரியல்ல. இறந்து போன நபர் வக்கீல் கரிகாலசோழனுக்கு உறவினர் என்பதால் அவரும் காவல் துறையும் சொல்லிக்கொடுத்தன்பேரில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஹரிசக்தி என்ற சக்திக்கு இடது தொடையில காயம் பட்ட விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். ஏற்கனவே ஊரை விட்டு

K.அஜய்

ஒதுக்கி வைத்துள்ள முன்விரோதத்தினால் எங்களுக்குள் ஏற்பட்ட சண்டையில் இரண்டு பேர் இறந்து போனதை எதிரிகள் கொலை செய்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**6ம் குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொன்னதுபோல் 6ம் எதிரி கொலை செய்தார் என்று புகாரிலும் இருமுறை போலிசார் விசாரித்தபோதும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சஞ்சய் எதிரிகளை ஏற்றி செல்வதற்கா தயார் நிலையில் இருசக்கரவாகனத்தை வைத்திருந்தார் என்று நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை புகாரிலும் இருமுறை போலிசார் விசாரித்தபோதும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 6ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. தற்போது காவல் துறையினர் சொல்லிக்கொடுத்ததுபோல நான் 6ம் எதிரியை சேர்த்து சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போனவர் என் அண்ணன் என்பதால் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K·அஜய்

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature]

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,
அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 2 (LW- 2) | நாள் | 20.08.2025 |
| பெயர் | தினேஷ் | தொழில் | வெல்டிங் வேலை |
| தந்தை பெயர் | ரமேஷ் | கிராமம் | முட்டம் |
| தாலுக்கா | மயிலாடுதுறை | வயது | |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் முட்டம் வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். வெல்டிங் வேலை பார்த்து வருகிறேன். இறந்து போனது என் நண்பர்கள் ஹரிஷ் மற்றும் ஹரிசக்தி ஆவார்கள். அவர்களை மூவேந்தன், தங்கதுரை, ராஜ்குமார் ஆகியோர் கொலை செய்து விட்டார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். 1ம் நபர் தங்கதுரை, 2ம் நபர் மூவேந்தன், 3ம் நபர் ராஜ்குமார், 4ம் நபர் முனுசாமி, 5ம் நபர் மஞ்சுளா, 6ம் நபர் சஞ்சய் என சாட்சி எதிரிகளை அடையாளம் காட்டினார். அவர்கள் ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை கொலை செய்ததால் நீதிமன்றத்தில் உள்ளார்கள். இரண்டு வருடத்திற்கு முன்பாக ராஜ்குமார் என்பவர் எங்கள் தெருவை சேர்ந்த முனுசாமி மகள் காயத்ரி என்பவரை காதலித்து திருப்பூருக்கு அழைத்து சென்று திருமணம் செய்து கொண்டார். அந்த திருமணத்திற்கு எங்கள் ஊரில் உள்ள எல்லோரும் எதிர்ப்பு தெரிவித்தோம். ஹரிஷ் சென்னையில் பிளம்பிங் வேலை செய்துவந்தார். அஜய் வெல்டிங் வேலை பார்த்துவந்தார். அஜயும் ஹரிஷ்ம் வெளியே சென்றால் அவர்களை பார்த்து கிண்டல் செய்வது காரிதுப்புவது என ராஜ்குமார் குடும்பத்தினர் தொடர்ந்து செய்து வந்தனர். அதே போல்

R. Dhinesh

நான் பட்டாக்கத்தியை வைத்து பிறந்தநாள் கொண்டாடியாகதாவும் பெண்களை கிண்டல் செய்ததாவும் எங்கள் ஊரை சேர்ந்த வழக்கறிஞர் கரிகாலன் என்பவரிடம் மூவேந்தன் சொன்னார். அதனடிப்படையில் வழக்கறிஞர் கரிகாலன் எனக்கு அறிவுரை வழங்கினார். அவரிடம் நான் அதுபோல் எதுவும் சொல்லவில்லை பொய் சொல்கிறார்கள் என்று சொன்னேன். 13.02.2025 அன்று மாலை 4.00 மணியளவில் என் தெருவின் முக்கூட்டில் நான் நின்று கொண்டிருந்தபோது மூவேந்தன் என்னை பார்த்து எதற்கு நரி போல் ஊளையிடுகிறாய் என்று சொல்லி கன்னத்தில் அரைந்து விட்டார். எதற்கு என்னை அடிக்கிறாய் என்று கேட்டபோது எதற்கு என்னை பார்த்து ஊளையிடுகிறார் எலக்காராமா இருக்கா என்று கேட்டுவிட்டு சென்றுவிட்டார். மறுநாள் 14.02.2025 அன்று இரவு 7.00 மணியளவில் என் தம்பி விக்னேஷை செல்போன் மூலம் தொடர்பு கொண்ட மூவேந்தன் உன் அண்ணன் எப்போது பார்த்தாலும் என்னுடன் பிரச்சனை செய்து வருகிறான் உன் அண்ணன் தலை முக்கூட்டில் சிதைந்து கிடக்கும் என்று மிரட்டினார். விக்னேஷ் மூவேந்தன் விளையாட்டிற்கு சொல்கிறார் என்று என்னிடம் சொல்லவில்லை. இரவு 8.00 மணியளவில் மூவேந்தன் என்னை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு எங்கடா இருக்க ஒரு அப்பனுக்கு பிறந்திருந்தால் எங்க இருக்க என்று சொல்லி மேலும் எப்ப பார்த்தாலும் என்னிடம் பிரச்சனை செய்து வருகிறாய் இதற்கு பிறகு உன்னை சும்மா விடப்போவதில்லை என்று சொன்னார். அதற்கு நான் உன்னிடம் எந்த பிரச்சனையும் வைத்துக்கொள்ளவில்லை என்று சொல்லி தெருவில் உள்ள கைப்பம்பு அருகில் உள்ள கட்டையில் தான் உட்கார்ந்திருக்கிறேன் என்று சொல்லி போனை வைத்தேன். எங்கள் தெருவில் செல்போன் டவர்

R. Dhinesh

கிடைக்காததால் பசங்க நாங்க அனைவரும் தெரு முக்கூட்டில் தான் இருப்போம் அன்றைய தினம் நான் அசா 1 அஜய், ஹரிஷ், ஹரிசக்தி ஆகியோர் இரவு சுமார் 8.30 மணியளவில் மேலேகூறிய தெரு முக்கூட்டில் உள்ள கைப்பம்பு அருகில்உட்கார்ந்திருந்தோம். அப்போது மூவேந்தன் அம்மா மஞ்சுளாவும் அவரது அப்பா முனுசாமியும் சத்தம் போட்டுக்கொண்டு வந்தார்கள். அவர்கள் இருவரும், அசிங்கமாக திட்டிக்கொண்டு வந்தார்கள். வேறு யாரையோ திட்டுகிறார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தபோது மஞ்சுளா என்னை பார்த்து எதற்கு என் மகனை பார்த்து நரி போல் ஊளையிடுகிறாய் என்று சொல்லிக்கொண்டிருந்தபோது மூவேந்தன், தங்கதுரை, ராஜ்குமார் ஆகியோர் ஆளுக்கொரு கத்தியுடன் அங்கு வந்து தங்கதுரை என்னை பார்த்து எதற்கு என் தம்பி மூவேந்தனை பார்த்து ஊளையிடுகிறாய் என்று கேட்டதற்கு நான் அதுபோல் செய்யவில்லை என்று சொன்னேன். அப்போது மஞ்சுளா, முனுசாமி ஆகியோர் அந்த நாய்களிடம் உங்களுக்கு என்ன பேச்சு கத்தியால் குத்திக்கொல்லுங்கடா என சொன்னார். அப்போது தங்கதுரை என்னை பார்த்து குச்சிக்காரி மகனே தேவுடியாக மகனே என்று திட்டி கத்தியால் என்னை குத்த வந்தார். பக்கத்தில் இருந்த ஹரிசக்தி என்னை இழுத்து தள்ளிவிட்டு எதற்கு அவனை கத்தியால் குத்த வருகிறீர்கள் என்று கேட்டபோது தங்கதுரை ஹரிசக்தியிடம் நீ என்ன பெரிய ஆளு மயிராடா அவனுக்கு சப்போர்ட் பன்னுகிறாயா அவனோடு சேர்ந்து நீயும் சேர்ந்து செத்து ஒழிந்து போடா என்று சொல்லி தங்கதுரை ஹரிசக்தியின் வயிற்றி குத்த செல்லும் போது ஹரிசக்தி திரும்பி கொள்ளவும் கத்திக்குத்தானது ஹரிசக்தியின் இடது பட்டக்ஸ்ஸ் கீழ் குத்தி விட்டது. ஹரிசக்தி மயங்கி கீழே விழுந்த நிலையில் தங்கதுரை

R. Dhinesh.

கத்தியின் பிடியால் ஹரிசக்தி நெஞ்சில் மாறி மாறி குத்தினார். அதை பக்கத்திலிருந்த ஹரிஷ் தடுக்க சென்றபோது அவர் வைத்திருந்த கத்தியால் நீ என்ன சப்போர்ட் பன்னுகிறாயா என்று சொல்லி நீயும் அவனோடு சேர்ந்து செத்து விடு என்று சொல்லி மூவேந்தன் ஹரிஷின் இடது வயிற்றில் கத்தியால் குத்தியுள்ளார் குடல் வெளியே வந்துவிட்டது. அதை பார்த்த ஹரிஷ் தம்பி அசா 1 அஜய் தடுக்க போகும் போது ராஜ்குமார் தான் வைத்திருந்த கத்தியால் அஜய் நெஞ்சில் கத்தியால் குத்த சென்றார் அதை அஜய் தடுக்கும் போது இடது கை கட்டைவிரலில் கத்திக்குத்து விழுந்து காயம் ஏற்பட்டது. அப்போது எங்கள் அருகில் ஆதித்யன், மாணிக்கம், ஜெகதீஷ், சுபசோழன் இருந்தார்கள். அப்போது நானும் அஜயும் எங்களை காப்பாற்றுங்கள் என்று சத்தம் போட்டோம் ஊர்காரர்கள் வந்துவிட்டார்கள். அப்போது சஞ்சய் அங்கு வண்டியை வைத்து நின்று கொண்டிருந்தார். மூவேந்தன், தங்கதுரை, ராஜ்குமார் ஆகியோர் தங்கள் வைத்திருந்த கத்தியை காட்டி இதற்கு பிறகும் எங்களிடம் வைத்திருந்தால் உங்களை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். மயங்கி கிடந்த ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றோம். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர் இருவரும் ஏற்கனவே இறந்துவிட்டதாக சொன்னார்கள். 15.02.2025 அன்று பெரம்பூர் காவல் ஆய்வாளர் நாகவள்ளி என்னை விசாரிக்கும்போது நான் தெளிவாக சொல்லவில்லை. பின்பு 18.02.2025 அன்று செம்பனார் கோவில் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நடந்தவற்றை தெளிவாக சொன்னேன். என்னிடம் காட்டப்படும் கருப்பு கைப்பிடி கொண்ட இரண்டு கத்திகள் எதிரிகள் கொலைக்கு பயன்படுத்தியதாகும். அதில் ஒன்று ஏற்கனவே சாபொ 1 ஆக குறியீடு

R. Dhinesh

செய்யப்பட்டுள்ளது. மற்றொரு **கருப்பு கைப்பிடி கொண்ட கத்தி சாபொ – 2** ஆகும. சாட்சியிடம் மூன்றவதாக ஒரு கத்தி காண்பிக்கப்படுகிறது சம்பவம் இருட்டில் நடந்ததால் சரியாக தெரியவில்லை என்று சொல்கிறார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் இருட்டில் நடந்தது என்றால் சாட்சி சர்ச் விளக்கு வெளிச்சம் இருந்தது என்கிறார். அங்கு வெளிச்சம் எதுவும் இல்லை என்றாலும் வெளிச்சம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக 15.02.2025 அன்று மருத்துவமனையில் விசாரித்தார்கள். 18.02.2025 அன்று சம்பவ இடத்தில் செம்பனார்கோவில் ஆய்வாளர் விசாரித்தார். 15.02.2025 அன்று விசாரித்தபோது நான் தெளிவாக சொல்லவில்லை என்றும் 18.02.2025 அன்று எல்லா விவரங்களையும் சொன்னதாவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன், என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையாக இருந்தால் நான் 15.02.2025 அன்றே சொல்லியிருப்பேன் என்றால் அது சரியல்ல. நாங்கள் பட்டாக்கத்தியை வைத்து கேக் வெட்டி ஆபாசமாக பேசி, கூச்சலிட்டதாலும் பள்ளிக்குசெல்லும் மாணவிகளை கேளி, கிண்டல் செய்ததற்காகவும் வழக்கறிஞர் கரிகாலன் எங்களை அழைத்து அறிவுரை வழங்கினார் என்றால் சரியல்ல. 14.02.2025 அன்று இரவு 7.00 மணியளவில் என் தம்பி விக்னேஷை செல்போன் மூலம் தொடர்பு கொண்ட மூவேந்தன் உன் அண்ணன் எப்போது பார்த்தாலும் என்னுடன் பிரச்சனை செய்து வருகிறான் உன் அண்ணன் தலை முக்கூட்டில் சிதைந்து கிடக்கும் என்று மிரட்டினார் என்று நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அவ்வாறு

R. Dhinesh.

மூவேந்தன் யாரையும் செல்போனில் தொடர்பு கொண்டு பேசவில்லை என்றாலும் அதனால் தான் அதை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இரவு 8.00 மணியளவில் மூவேந்தன் என்னை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு எங்கடா இருக்க ஒரு அப்பனுக்கு பிறந்திருந்தால் எங்க இருக்க என்று சொல்லி மேலும் எப்ப பார்த்தாலும் என்னிடம் பிரச்சனை செய்து வருகிறாய் இதற்கு பிறகு உன்னை சும்மா விடப்போவதில்லை என்று சொன்னார். அதற்கு நான் உன்னிடம் எந்த பிரச்சனையும் வைத்துக்கொள்ளவில்லை என்று சொல்லி தெருவில் உள்ள கைப்பம்பு அருகில் உள்ள கட்டையில் தான் உட்கார்ந்திருக்கிறேன் என்று சொல்லி போனை வைத்தேன் என்று நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 13.02.2025 அன்று மூவேந்தன் என்னை கண்ணத்தில் அரைந்தது தொடர்பாக நான் போலிசில் எந்த புகாரும் கொடுக்கவில்லை. அவர் என்னை கண்ணத்தில் அரையவில்லை என்றாலும் அவ்வாறு நடந்திருந்தால் நான் போலிசில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் அது சரியல்ல. ராஜ்குமார் காயத்ரியை காதல் திருமணம் செய்து கொண்டது தொடர்பாக அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆஜர் எதிரிகளின் குடும்பத்தை ஊரைவிட்டு ஒதுக்கி வைப்பதாக தீர்மானம் போட்டு அவர்கள் குடும்பத்தினருடன் யாரும் பேச்சுவார்த்தையில்லாமல் எங்கள் ஊர்காரர்கள் இருந்தோம் என்றால் சரியல்ல அப்படி இல்லை. நான், அஜய், ஹரிஷ், ஹரிசக்தி மற்றும் என் நண்பர்கள் நடுரோட்டில் கேக் வெட்டுவது, மாணவிகளை கேளிகிண்டல் பேசுவது போன்ற செயல்களால் எங்கள் நண்பர்களுக்குள் ஏற்பட்ட சண்டையால் ஏற்பட்ட ஆயுத தகராறில்தான் அவர்கள் இருவரும்

R. Dhinesh.

இறந்துபோனர்கள் என்றால் சரியல்ல. ஹரிசக்திக்கு அந்த சமயத்தில் இதய அறுவை சிகிச்சை செய்திருந்தார்கள் என்றால் சரியல்ல சாட்சி சின்ன வயதில் செய்தது என்கிறார். எங்கள் நண்பர்களுக்குள் ஏற்பட்ட சண்டையால் ஹரிசக்தி தடுமாறி தலைக்குப்புற கீழே விழுந்து ஏற்கனவே இதய அறுவை சிகிச்சை செய்திருந்த இடத்தில் பலமாக அடிபட்டதால் அவர் இறந்துபோனார் என்றால் சரியல்ல. நான் வக்கீல் கரிகால சோழனின் சித்தப்பா மகன் என்றால் சரிதான். இறந்துபோன ஹரிசக்தி என்பவரும் எனக்கும் வக்கீல் கரிகாலசோழனுக்கும் உறவினர் என்றால் சரிதான். எங்களுக்கு ஏற்பட்ட சண்டையை ஊரை விட்டே ஒதுக்கு வைத்துள்ள ஆஜர் எதிரிகளின் குடும்பத்தை பழி வாங்க வேண்டுமென்பதற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தங்கதுரை ஹரிசக்தியை பட்டக்ஸ்க்கு கீழே குத்தியதாகதான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். ராஜ்குமார் அஜயை கத்தியால் குத்த சென்றபோது அவர் இடது கையால் தடுத்ததில் அவருக்கு இடது கை கட்டைவிரலில் காயம் ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அஜய்க்கு இடது கை கட்டைவிரலில் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் , அஜய், ஹரிஷ், ஹரிசக்தி ஆகியோரை தவிர வேறு யாரும் அங்கில்லை. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன ஹரி என்ற ஹரிசக்தி எனக்கும் வக்கீல் கரிகாலனுக்கும் உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஹரிஷ் என் நண்பர் என்பதாலும் வழக்கறிஞர் கரிகாலன், காவல் துறையினர் எவ்வாறு சாட்சியமளிக்கவேண்டுமென்ற சொல்லிக்கொடுத்தபடி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மூவேந்தன் அம்மா மஞ்சுளாவும்

R. Dhinesh.

அவர் அப்பாவும் அசிங்கமாக திட்டியதாகவும் தங்கதுரையிடம் எதற்கு அவனிடம் பேசுகிறீர்கள் குத்திக்கொல்லுங்கடா என்று சொன்னதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்தபோது கத்தியின் கைப்பிடியின் நிறம் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி சொல்லியுள்ளேன் என்கிறார்.

**6ம் குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

6ம் எதிரி சஞ்சய் கொலை செய்ததாக போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 6ம் எதிரி இருசக்கரவாகனத்தை வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள செய்தியை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். 6ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் சொல்லிக்கொடுத்ததன்படி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போனவர்கள் என் நண்பர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. R. Dhinesh.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

20/2

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 3 (LW- 3) | நாள் | 20.08.2025 |
| பெயர் | ஆதித்யன் | தொழில் | வெல்டிங் வேலை |
| தந்தை பெயர் | ரவிச்சந்திரன் | கிராமம் | முட்டம் |
| தாலுக்கா | மயிலாடுதுறை | வயது | 20 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் முட்டம் வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். ஸ்டென்லஸ் ஸ்டீல் வெல்டிங் வேலை செய்துவருகிறேன். இறந்து போன ஹரிஷ், ஹரிசக்தியை தெரியும். அவர்களை ராஜ்குமார், மூவேந்தன், தங்கதுரை ஆகியோர் கொலை செய்துவிட்டார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு ராஜ்குமார் முனுசாமி மகள் காயத்திரி என்பவரை திருப்பூருக்கு அழைத்து சென்று திருமணம் செய்து கொண்டார். அதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்தோம். அதனால் ராஜ்குமார் எங்கள் மீது முன்விரோதம் கொண்டிருந்தார். ஒரு வருடம் கழித்து ராஜ்குமாரும் காயத்திரியும் எங்கள் ஊருக்கு வந்து மூவேந்தன் குடும்பத்துடன் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். அதன்பிறகு ராஜ்குமார், மூவேந்தன், தங்கதுரை ஆகியோர் ஒன்று சேர்ந்து கொண்டு பசங்களாகிய நாங்க வெளியே செல்லும்போது எங்கள் ் கேளி கிண்டல் செய்வதுமாக இருந்தார்கள். அதை நாங்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் விட்டுவிட்டோம். அதன்பிறகு 13.02.2025 அன்று மாலை தினேஷ் ஊளையிட்டதாக மூவேந்தன் தினேஷ் கன்னத்தில்அரைந்து விட்டார். அதற்கு பிறகு அவர்களுக்குள். வாய்

R. Dohh

வார்த்தை சண்டை ஏற்பட்டு முடிந்துவிட்டது. அதன்பிறகு 14.02.2025 அன்று இரவு 8.30 மணியளவில் எங்கள் தெரு முக்கூட்டு அடிபம்பு அருகில் உள்ள கட்டையில் தினேஷ், ஹரிஷ், ஹரிசக்தி, அஜய் ஆகியோர் செல்போன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது மஞ்சுளா அங்கு வந்து எதற்கு என் மகன் மூவேந்தனை பார்த்து ஊளையிடுகிறாய் குச்சிக்காரி மகனே தேவுடியா மகனே என்று திட்டினார். என் மகன் என்ன செய்கிறான் என்று பாருடா என்று சொல்லிய நிலையில் தங்கதுரை, மூவேந்தன், ராஜ்குமார் ஆளுக்கொரு கத்தியை வைத்துக்கொண்டு தங்கதுரை தினேஷை பார்த்து ஏன்டா தேவுடியா மகனே என் தம்பி மூவேந்தனை பார்த்து ஊளையிடுகிறார் இதோடு நீ செத்து ஒழிந்து போடா என்று சொல்லி தினேஷை கத்தியால் குத்த வந்தபோது ஹரிசக்தி அதை தடுக்க வந்தார். பின்பு தங்கதுரையை பார்த்து ஹரிசக்தி என்ன அண்ணா உனக்கும் தினேஷிக்கும் பிரச்சனை ஏன் கத்தியால் குத்த வருகிறாய் என்று கேட்டபோது தங்க துரை நீ என்ன அவனுக்கு வக்காலத்து வாங்க வரயா செத்து ஒழிந்து போடா என்று சொல்லி ஹரிசக்தியை கத்தியால் குத்த வந்தபோது ஹரிசக்தி திரும்பி கொள்ள அவருடைய இடது பட்டக்ஸில் கத்தியால் குத்தி விட்டான். ஹரிசக்தி மயங்கி கீழே விழுந்துவிட தங்கதுரை கத்தியை திருப்பி கத்தியின் கைப்பிடியால் நெஞ்சிலே மாங்கு மாங்கு என்று குத்தினார். அதை ஹரிஷ் தடுக்க வந்தபோது மூவேந்தன் ஹரிஷ் இடது புற வயிற்றில் கத்தியால் குத்திவிட்டான் குடல் சரிந்துவிட்டது. ஹரிஷை காப்பாற்ற சென்ற அஜயை ராஜ்குமார் கத்தியால் குத்த வந்தபோது அதை தடுத்த அஜய்க்கு இடது கை கட்டை விரலில் காயம் ஏற்பட்டது. அப்போது பத்து மீட்டர் தள்ளி நின்று கொண்டிருந்த நாங்கள் அதாவது சுபசோழன் நான்,

R. Ashok

ஜெகதீஷ் ஆகியோர் பார்த்தபோது சஞ்சய் பல்சர் இருசக்கரவாகனத்தில் நின்று கொண்டிருந்தார். நாங்கள் சத்தம் போட்டபோது மூவேந்தன், ராஜ்குமார், தங்கதுரை ஆகியோர் கத்தியை காட்டி எங்களிடம் வைத்துக்கொண்டால் உங்களுக்கும் இதே நிலைமைதான் என்று சொல்லி பைக்கில் ஏறி சென்றுவிட்டார்கள். பிறகு ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை இருசக்கரவாகனத்தில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பரிசோதனை செய்த மருத்தவர் இருவரும் இறந்து விட்டதாக சொன்னார்கள். மறுநாள் பெரம்பூர் காவல் ஆய்வாளர் நாகவள்ளி என்னை விசாரித்தபோது நடந்ததை சொன்னேன்.

**1முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடம் வடக்கு தெரு முக்கு ஒரு இருட்டான இடம் என்றால் சரியல்ல வெளிச்சம் இருந்தது. சம்பவம் நடந்தபோது நான்கு பேருடன் நான் இல்லை. 13.02.2025 மாலை மூவேந்தன் தினேஷை கண்ணத்தில் அறைந்ததாக நான் கேள்விப்பட்டேன். கூச்சல் சத்தம் கேட்டுதான் அந்த இடத்திற்கு போனோம் என்றால் சாட்சி சம்பவ இடத்திலிருந்து 10 மீட்டர் தொலைவில் நின்று கொண்டிருந்தோம் என்கிறார். 10 மீ தொலைவில் இருந்து அஜய், தினேஷ், ஹரிஷ், ஹரிசக்தி ஆகிய நான்கு பேர் இருந்த முக்கூட்டில் நடந்த வழக்கு சம்பவத்தை அந்த இடத்திலிருந்த மின்விளக்கு வெளிச்சத்தில் சம்பவத்தை நான் பார்த்தேன். போலிசார் விசாரித்தபோது இந்த விவரத்தை நான் சொன்னேன். வக்கீல் கரிகாலன், ஹரிசக்தி என்ற சக்தியும் என் உறவினர் தான். ஆஜர் எதிரிகளின் குடும்பத்தை காதல் திருமணத்தின் காரணத்திற்காக ஊரை விட்டு ஒதுக்கி வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. ஹரிசக்தியை 1ம் எதிரி கத்தியால்

R. Abdi

குத்தி கீழே தள்ளி நெஞ்சில் கத்தியின் கைப்பிடியால் குத்தியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஹரிசக்தியின் மார்பு பகுதியில் தங்கதுரை குத்திய கத்தியின் கைப்பிடியின் நிறம் என்ன என்று விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் உண்மையிலேயே சம்பவத்தை பார்த்திருந்தால் அந்த கத்தியின் கைப்பிடியின் நிறம் என்ன என்று சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. மற்ற எதிரிகள் குத்தியதாக சொல்லும் கத்தியின் கைப்பிடியின் நிறம் என்னவென்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும், இறந்து போனவர்கள் என் உறவினர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாகவும் ஆஜர் எதிரிகள் எனக்கும் எங்கள் கிராமத்திற்கும் பிடிக்காதவர்கள் என்பதால் அவர்களுக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வக்கீல் கரிகாலசோழனும், காவல் துறையினரும் சொல்லிக்கொடுத்தபடி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மஞ்சுளா சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தில் இருந்த நால்வரையும் பார்த்து ஆபசமாக திட்டியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**6ம் குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சுபசோழன் நான், ஜெகதீஷ் ஆகியோர் பார்த்தபோது சஞ்சய் பல்சர் இருசக்கரவாகனத்தில் நின்று கொண்டிருந்தார் என்று முதல் விசாரணையில் நான் சொன்ன சங்கதியை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்து போன நபர்கள் என் நண்பர்கள் என்பதால் போலிசார் சொன்னபடி 6ம் எதிரியை சேர்த்து நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் 6ம் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

R. Adith

என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

20/4/20

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை